TNVR090001362021

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் புதன் கிழமை
இ.ம.எண். 4/2024
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.31/2021

XXXXXXXXXXX ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXXXX ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 16.08.2024 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. மணிகண்டன் அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும் எதிர்உரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

எதிர்மனுதாரர், மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுக்கும் சேர்த்து இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/–த்தை கொடுக்க

உத்தரவிடக்கோரி இந்து திருமணச்சட்டம் பிரிவு 24–ன் கீழ் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுவின் சுருக்கம் :–</u>**

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவின் மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.08.2008–ஆம் தேதி சாத்தூரில் உள்ள மிளகாய் வத்தல் வியாபாரிகள் திருமண மண்டபத்தில் பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் இந்து சமய குல வழக்கப்படி திருமணம் நடைபெற்றது. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் பாரம்பரியம் மற்றும் வசதி வாய்ந்த குடும்பத்தை சேர்ந்தவர்கள். அதன் காரணமாக மனுதாரருக்கு 100 பவுன் தங்க நகைகளும், ரூ.2,00,000/– ரொக்கம் மற்றும் ரூ.3,00,000/– பெறுமான பண்ட பாத்திரங்களும் சீதனமாக கொடுக்கப்பட்டன. எதிர்மனுதாரருக்கு ஒரு பவுன் தங்க மோதிரம் மற்றும் 9 பவுன் தங்க மைனர் செயின் மனுதாரரின் பெற்றோர்களல் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது. திருமணத்திற்கு பின்பு மனுதாரரும், எதிர்மனுதாரரும் மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரர் சதீஷ்குமார் மற்றும் சகோதரி இராஜலெட்சுமி மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் இந்து கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தனர்.

திருமணம் நடந்த நாள் முதல் எதிர்மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லாமல் ஊதாரித்தனமாக செலவுகளை செய்து வந்ததால் மனுதாரர் வறிய நிலைக்கு தள்ளப்பட்டார். அதன் காரணமாக மனுதாரர் விருதுநகரில் உள்ள A.S.C. பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். இதற்கிடையில் 21.06.2009–ஆம் தேதி தரப்பினர்களுக்கு வர்ஷினி ஸ்ரீ மற்றும் 19.09.2010–ஆம் தேதி விஜய ஸ்ரீ என்ற இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளனர். குழந்தைகள் பிறந்ததால் எதிர்மனுதாரர் மனம்மாறி ஊதாரித்தனமாக செலவழிக்காமல் குடும்பத்தை வழி நடத்துவார் என்று மனுதாரர் எண்ணினார்.

ஆனால், எதிர்மனுதாரர் சரியாக வேலைக்கு செல்லாமலும், குடும்பத்தை கவனிக்காமலும் இருந்து வந்தார். மேலும், மனுதாரரை சந்தேகப்பட்டு துன்புறுத்தி வந்ததால் மனமுடைந்த மனுதாரர், எதிர்மனுதாரர் மீது 19.04.2017–ஆம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் மீதான விசாரணையில் ஆஜரான எதிர்மனுதாரர் இனிமேல் மனுதாரரை சந்தேகப்பட்டு துன்புறுத்த மாட்டேன் என்றும், எவ்வித தவறுதலும் செய்ய மாட்டேன் என்றும், ஒழுங்காக வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றுவேன் என்று கூறியதன் அடிப்படையில் புகார் மனு முடிக்கப்பட்டது.

பின்பு சிறிது காலம் அமைதியாக வாழ்க்கையை நடத்திய எதிர்மனுதாரர் 24.09.2017–ஆம் தேதி மனுதாரரிடம், மனுதாரருக்கும், அவரது இரண்டு குழந்தைகளுக்கும் உரிய பங்கான வீட்டினை எதிர்மனுதாரர் அவரது உடன் பிறந்தவர்களோடு விற்பனை செய்து விட்டதாக கூறினார். மேலும், உடனடியாக மனுதாரரை அவரது குழந்தைகளோடு வீட்டை காலி செய்ய வேண்டுமென்று கூறினார். அதற்கு மறுத்த மனுதாரர் உடனடியாக வீட்டை காலி செய்ய முடியாது என்றும், வீடு விற்றதில் கிடைத்த தொகையினை மனுதாரர் அவரது குழந்தைகளின் பேரில் உடனடியாக டெபாசிட் செய்ய வேண்டுமென்று எதிர்மனுதாரரிடம் கூறினார். அதற்கு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டு உடனடியாக கூலி ஆட்களை அழைத்து வந்து வீட்டில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்த முயற்சித்தார். மனுதாரர் உடனே கூலி ஆட்கள் மீது போலீசில் புகார் கொடுக்க போவதாக கூறியதன் பேரில் அவர்கள் திரும்ப சென்று விட்டார்கள்.

மேலும், எதிர்மனுதாரரின் தந்தையின் தாய்மாமா காசிராஜன் என்பவர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெயரில் கூட்டாக இருந்த மனுதாரர் குடியிருந்த வீட்டிற்கு பின்புறமுள்ள 3 வீடுகளை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் மற்றும் மனுதாரரும், எதிர்மனுதாரரும் குமரன் நகரில்

வாங்கியுள்ள காலி இடங்களை பொறுத்து வாங்கப்பட்ட கிரைய பத்திரங்களை மனுதாரரிடமிருந்து வலுக்கட்டாயமாக பறித்து கொண்டு விட்டார். மனுதாரர் பத்திரங்களை திருப்பி கொடுங்கள் இல்லையெனில் போலீசில் புகார் கொடுப்பேன் என்று சொன்னதற்கு எதிர்மனுதாரர், மனுதாரரின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கெட்ட வார்த்தைகளால் திட்டி மனுதாரரை எட்டி உதைத்தார். மனுதாரரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் வந்து மனுதாரரை, எதிர்மனுதாரரிடமிருந்து காப்பாற்றினார்கள். இதனால் மனுதாரர் குழந்தைகளின் எதிர்காலத்தை கருதியும், மனுதாரரை, எதிர்மனுதாரர் கொலை செய்து விடுவேன் என்று கூறியதனால் பயந்து விருதுநகர், அனைத்து மகளிர் சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்துள்ளார். புகாரின் மீதான விசாரணையில் எதிர்மனுதாரர், மனுதாரரை கொடுமைப்படுத்த மாட்டேன் என்று உறுதி அளித்தார். ஆனால், எதிர்மனுதாரர் நன்கு குடித்து விட்டு வீட்டிற்கு வந்து மனுதாரரை கீழ்த்தனமான வார்த்தைகளால் திட்டி அடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளி கதவை பூட்டி விட்டார். மனுதாரர் பயந்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார்.

பின்பு மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்கள், சகோதரிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப் போவதை அறிந்த எதிர்மனுதாரர் விருதுநகர், சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர், மனுதாரரோடு சேர்ந்து வாழ விரும்புவதாக HMOP.No.136/2017 என்ற மனுவை தாக்கல் செய்தார். அந்த மனுவில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழப்போகிறோம் என்று கூறியதன் அடிப்படையில் மனுவானது முடிக்கப்பட்டது. அதன்பின்பு சில வருடங்கள் அமைதியாக இருந்த எதிர்மனுதாரர், மனுதாரரோடு சண்டையிட்டு வெளியே சென்று விட்டார். அதன்பின்பு மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் வந்து மனுதாரரை சந்தேகப்பட்டு கீழ்த்தனமான வார்த்தைகளால் திட்டி சென்று விட்டார். கடந்த

02.12.2020–ஆம் தேதி எதிர்மனுதாரர் நன்கு குடித்து விட்டு மனுதாரருடைய வீட்டிற்குள் வந்து மனுதாரரை அசிங்கமாக திட்டி, அடித்து கொடுமைப்படுத்தினார். எதிர்மனுதாரர் வேண்டாத நபர்களுடன் சேர்ந்து குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி மனுதாரரை அடித்தும், துன்புறுத்தியும் வருகிறார். மேலும், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து மாத வாடகையாக ரூ.60,000/–த்திற்கும் மேல் பெற்று வருகின்றார். எனினும் மனுதாரர் மற்றும் குழந்தைகளின் ஜீவனத்திற்கு என பண உதவியினை கடந்த 6 மாத காலமாக மனுதாரர் கேட்டும் கொடுக்கவில்லை. மேலும், மனுதாரர் அவரது குழந்தைகளையும் பராமரித்து வருகிறார். மனுதாரர் குழந்தைகளை பராமரிப்பதற்கு ஆன தொகைகளை கடனாக வெளி நபர்களிடம் பெற்று செலவழித்து வருகிறார்.

மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், துணிமணிகள், மருத்துவ வசதி செய்ய வேண்டியது எதிர்மனுதாரரின் கடமையாகும். ஆனால், எதிர்மனுதாரர், மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளை புறக்கணித்து உணவு, உறைவிடம் கொடுக்காமலும், மனுதாரர்களை பராமரிக்காமலும் இருந்து வருகிறார். மேலும், எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து மாத வாடகையாக ரூ.60,000/–த்திற்கும் மேல் பெற்று உல்லாசமாகவும், தான்தோன்றித்தனமாகவும் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர், மனுதாரருடைய வாழ்க்கையை சீரழித்துவிட்டு மனுதாரரை உதாசீனப்படுத்தி வருகிறார். மனுதாரர் தற்போது அவருக்கும் அவரது குழந்தைகளுக்குமான ஜீவனாம்சத்திற்குரிய பணமின்றி கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார். மனுதாரரின் பெற்றோர்கள் வயதானவர்கள். மனுதாரர் அவர்களுக்கு பாரமாக இருந்து வருகிறார். எதிர்மனுதாரரின் செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும். மனுதாரருக்கு உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ பராமரிப்பு செலவுகளுக்கு மாதம்

ஒன்றுக்கு ரூ.10,000/–மும், குழந்தைகளுக்கு தலா ரூ.10,000/–ம் என ஆக மொத்தம் ரூ.30,000/– வரை தேவைப்படுகிறது. எனவே, வழக்கு முடியும் வரை இடைக்கால ஜீவனாம்சமாக ரூ.30,000/–த்தை எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர் இவ்வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்ய போதிய வாய்ப்பு அளித்திருந்தும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைத்தும் ஆஜரின்மையாலும் ஒருதரப்பாக்கப்பட்டார். மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**5.** தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**6.** அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.08.2008–ஆம் தேதி சாத்தூரில் உள்ள மிளகாய் வத்தல் வியாபாரிகள் திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 21.06.2009–ஆம் தேதி வர்ஷினி ஸ்ரீ மற்றும் 19.09.2011–ஆம் தேதி விஜய ஸ்ரீ என்ற இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து மாத வாடகையாக ரூ.60,000/–த்திற்கும் மேல் வருவதாகவும், மனுதாரரையும், குழந்தைகளையும் பராமரிக்கும் கடமை இருந்தும் எந்தவித நியாயமான

காரணமும் இன்றி மனுதாரரையும், குழந்தைகளையும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், இந்த மனுவின் மனுதாரருக்கு எந்த வருமானமும் இல்லாத காரணத்தினால் தனக்கும், தனது குழந்தைகளின் அன்றாட ஜீவனத்திற்கு தன் பெற்றோர்களையே நம்பி மிகுந்த கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எனவே, எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சத்தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் கூறியுள்ளார்.

**7.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையே இந்த மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் வழங்க வேண்டுமா, இல்லையா என்பதேயாகும். மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து மாத வாடகையாக ரூ.60,000/—த்திற்கும் மேல் பெற்று வருவதாகவும் கூறியுள்ளதை வைத்து பார்க்கும்போது, எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதற்கு போதுமான வசதியும், வருமானமும் உள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த மனுதாரர் அவருக்கும், அவரது குழந்தைகளுக்கும் ஜீவனாம்சத்திற்குரிய பணமின்றி கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக கூறி, எதிர்மனுதாரருக்கு உள்ள வசதி வாய்ப்புகள் பற்றி கூறியுள்ளதையும் வைத்து பார்க்கும்போது, இந்த மனுதாரருக்கு இந்த எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு கணவன் என்ற முறையிலும், குழந்தைகளுக்கு தகப்பன் என்ற முறையிலும் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரருக்கு மாதம் ரூ.4,000/—மும், அவரது குழந்தைகளுக்கு தலா ரூ.3,000/— வீதம் மாதம் ரூ.6,000/—மும் ஆக மொத்தம் ரூ.10,000/—த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05—ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரருக்கு மாதம்

ரூ.4,000/–மும், அவரது குழந்தைகளுக்கு தலா ரூ.3,000/– வீதம் மாதம் ரூ.6,000/–மும் ஆக மொத்தம் ரூ.10,000/–த்தை எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சமாக கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இடைக்கால ஜீவனாம்சத் தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05–ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.4/2024 இன்
இ.தி.மு.ம.எண்.31/2021
உத்தரவு நாள். 04.09.2024